நகராட்சி அலுவலகம், ஆத்தூர்.
(சேலம் மாவட்டம்),
நாள்.29.10.2020.

அன்புடையீர்,
2020ம் வருடம் அக்டோபர் மாதம் 29.10.2020 இயல்புக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

## பொருள்கள்

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.0281/2020 அ3 நாள்.05.10.2020ல் இந்நகராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்களுக்கான விரிவாக்க பயிற்சி ( Comprehensive Training Course) Batch-1 12.10.2020 முதல் 06.11.2020 வரை பயிற்சியில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்படி பயிற்சிக்கு கலந்து கொள்ள நபர் ஒன்றுக்கு ரூ.20000/– வீதம் நான்கு நபர்களுக்கு ரூ.80000/– செலவினத்திற்கு தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.2653/2020/சி1)

2. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு DBC பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 31.10.2020ம் தேதியுடன் முடிவடைவதால், மேலும் 3 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறவும், அதற்கான செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கும் தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுயஉதவிக்குழுக்களிடம் இருந்து குறுகியகால ஒப்பந்தப்புள்ளி பெற்று அடுத்த 3 மாதங்களுக்கு DBC பணியாளர்களை பணியில் தொடர தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத் தொகை ரூ.15.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3163/2017/எச்1)

3. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் வார்டு எண்.17 வரையுள்ள பகுதிகளில் ஏற்படும் குடிநீர் குழாய்கள் உடைப்பு மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக ஜி.ஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு 2020-2021ன்கீழ் 31.03.2021 வரை பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண்.2581/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

4. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் ஏற்படும் குடிநீர் குழாய்கள் உடைப்பு மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்காக ஜி.ஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு 2020-2021ன் கீழ் 31.03.2021 வரை பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண்.2583/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

5. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 கோட்டை நடுத்தெரு பகுதியில் ஏற்கணவே உள்ள ஆழ்த்துளை கிணற்றின் மின்மோட்டார், கேபிள் மற்றும் பைப் லைன் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட ஆழ்த்துளை கிணற்றில் புதியதாக 5HP மின்மோட்டார் 40mm ஜி.ஐ பைப் மற்றும் கேபிள் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,90,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2659/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

6. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 நராயணபுரம் பகுதியில் குடிநீர் விநியோக குழாய் இல்லாத காரணத்தால் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று அப்பகுதியில் உள்ள நாரயணபுரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இருந்து புதியதாக 4"பி.வி.சி குழாய் அமைத்து வால்வு பொருத்தி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,20,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண்.2524/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

7. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் 103 ஆழ்துளை கிணறுகளில் மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு 2020-2021-ன்கீழ் 31.03.2021 வரை பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2278/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

8. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 17 வரையுள்ள பகுதிகளில் 123 ஆழ்துளை கிணறுகளில் மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத பயன் பாட்டிற்காக பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு 2020-2021 ன் கீழ் 31.03.2021 வரை பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண்.2585/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

9. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மேட்டூர்-ஆத்தூர் கூட்டு குடிநீர் திட்டதின்கீழ் குடிநீர் பெறப்பட்டு 7 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் காந்திநகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் 3 தொட்டிகள் தவிர மற்ற 4 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு ஒரே நீரேற்ற குழாயில் நீரேற்றம் செய்யப்படுவதால் ஒரே நேரத்தில் 4 தொட்டிகளில் நீரேற்றம் செய்ய இயலாத நிலை உள்ளதால் ஒரே நேரத்தில் 4 தொட்டிகளில் நீரேற்றம் செய்ய காந்தி நகர் நீர்தேக்க தொட்டியிலிருந்து நீரேற்ற குழாயிலிருந்து புதியதாக 10" சி.ஐ குழாய் மற்றும் வால்வுகள் அமைத்து ஏற்கனவே உள்ள 10"ஏ.சி குழாயில் இணைப்பு செய்து வால்வுகள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு தனி அலுவலர் தீர்மானம் எண்.174, நாள்.30.09.2020ல் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 30.09.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரபெற்றதினை முடிவு செய்ய தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு எஸ்.அபுபக்கர் சித்திக் ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர் செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.66 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விடகுறைந்த 0.05% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.அபுபக்கர் சித்திக் ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் ஏற்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.அபுபக்கர் சித்திக் ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். (ந.க.எண்2299/2020/இ2)

10. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 பகுதிகளுக்கு உப்பு ஓடை மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பகுதிகளுக்கு சரிவர குடிநீர் விநியோகம் கிடைக்கபெறாத காரணத்தால் மேல்நிலைநீர்தேக்க தொட்டியிலிருந்து செல்லும் மற்றொரு குடிநீர் விநியோக குழாயில் இரண்டு பிரிவுகளாக பிரித்து புதியதாக 4”பி.வி.சி பைப் லைன் மற்றும் வால்வு பொருத்தி குடிநீர் விநயோகம் செய்தல் பணிக்கு தனிஅலுவலர் தீர்மானம் எண்170, நாள்: 04.09.2020ல் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு30.09.2020ல் ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரபெற்றினை முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.அபுபக்கர் சித்திக், ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.04% மதிப்பீட்டை விடகுறைவு |
| 2 | திரு.ஆர் செல்லக்கண்ணு, ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.63 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விடகுறைந்த 0.04% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.அபுபக்கர் சித்திக் ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் ஏற்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.அபுபக்கர் சித்திக் ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம். (ந.க.எண்2085/2020/இ2)

11. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வார்டு எண்1முதல் 33வரையுள்ள பகுதிகளில் திறந்த வெளி மலம் கழிப்பறையில் இருந்தே (Open Defecation Free+) (ODF+) நகரமாக அறிவிக்கப்பட உள்ளது. அனைத்து நடைமுறைகளும் கடைபிடிக்கப் பட்டுள்ளது. எனவே பொது மக்கள் இது குறித்து தங்களது ஆலோசனைகள் மற்றும் ஆட்சே பனைகளை அறிவிப்பு வெளியான நாளில் இருந்து 15 தினங்களுக்குள் ஆத்தூர் நகராட்சி ஆணையாளருக்கு எழுத்து பூர்வாமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் தெரிவித்துகொள்ளுமாறு தினசரி நாளேடு தமிழ் நாளிதழில் விளம்பரம் விளம்பரம் செய்தமைக்கு தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் .
2. மேற்படி அறிவிப்பு தினசரி நாளேடு தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ஆன செலவினத்தை விளம்பரம் செய்த நிறுவனதிற்கு வழங்கவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்(ந.க எண்2795/2014/எச்1) .

12. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர்முழுவதும் உள்ள மின்மோட்டார்களை இயக்குதல் ஆகிய பணிகளை இது நாள்வரை அலுவலக பணியாளர்கள் வாயிலாக செய்யப்பட்டு வந்தது. தற்சமயம் 206 ஆழ்துளை கிணறுகள் மற்றும் 9 மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியன ஆத்தூர் நகராட்சியில் உள்ளதால் ஏற்கனவே பணி செய்த பொறியியல் பிரிவு பணியாளர் வயது முதிர்வு மற்றும் உடல் நிலை சரியில்லாமல் மரணம் அடைந்துள்ளதால் மேற்படி பணிகளை கவனிக்க போதிய ஆட்கள் இல்லை எனவே (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் 10 [illegible] 01.102020தல் 31.03.2021 முடிய 6 மாதங்களுக்கு பணியில் அமர்த்திக் கொள்ள ஆகும் செலவினத்திற்கு தனி அலுவலர் தீர்மானம் எண்,172, நாள் 04.09.2020ல் ரூ.8.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியதன்பேரில் மேற்படி பணிக்கு 30.09.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்ண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.அபுபக்கர்சித்திக் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 1.94% மதிப்பீட்டுவிலையைவிட [illegible] |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.அபுபக்கர்சித்திக் ஆத்தூர் என்பவரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.அபுபக்கர்சித்திக் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் ஏற்கலாம், பணி மேற்கொள்ள [illegible] வழங்கவும், தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண் 1188/2020/இ2)

342

13. இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் டெங்கு தடுப்பு பணிகளை நிர்வாக நலன் கருதி உள்ளூர் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வாயிலாக பணி மேற்கொள்ள தனிஅலுவலரின் முன்அனுமதியுடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் டெங்கு தடுப்பு பணிகளை செய்து 28.10.2020 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தத்தினை தனிஅலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**DBC பணியாளர்களுக்கு 1 நாளைக்கு கொடுக்க சம்மதித்த ஊதிய விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ அம்மன் மகளிர் SHG | ரூ.356/– |
| 2 | ஜோதி மகளிர்SHG | 410/– |
| 3 | ரோஸ் மகளிர் SHG | 390/– |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரப்பெற்ற "ஸ்ரீ அம்மன் மகளிர் SHG ஆத்தூர்" என்ற குழுவிற்கு டெங்கு தடுப்பு பணிகாலத்திற்கான அடுத்த மூன்று மாத காலத்திற்கு (01.11.2020 முதல் 31.01.2021) வரையிலான ஒப்பந்த அடிப்படையில் செய்து தர தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதை தனிஅலுவலர் ஏற்கலாம்.**(3163/2017/எச்1)**

14. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்கிவரும் புதிய குடிநீர் லாரி எண். TN27P-2585ல் ஏற்கனவே உள்ள பழைய குடிநீர் லாரியில் இருந்து ஆயில் இஞ்ஜின் எடுத்து புதிய லாரியில் பொருத்தி பொதுமக்கள் குடிநீர் பிடிக்கும் பொருட்டு ஜி.ஐ பைப் லைன் அமைத்திடவும் கூடுதலாக ஸ்பிரிங் பட்டை மற்றும் ஏர் ஹாரன் பொருத்திடவும் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின தொகை ரூ.60,000/-க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். **2649** /2020/இ2)

15. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு புதியதாக 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட குடிநீர் லாரி வாங்கப்பட்டுள்ளது. அதற்கான தற்காலிக பதிவு செய்யப்பட்டுள்ளது. வரிகள் செலுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிரந்தர பதிவு செய்ய உத்தேச செலவின தொகை ரூ.23,000/-க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். **2688** /2020/இ2)

16. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 7ல் உள்ள அவ்வையார் தெருவில் புதியதாக அமைப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுக்கு மின் இணைப்பு மற்றும் கேபிள் அமைத்து பைப் லைன் பொருத்தி குடிநீர் வசதி செய்தல் பணிக்கு அமைக்கவும் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச செலவின தொகை ரூ.1,10,000/-க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2659 /2020/இ2)

17. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1ல் உள்ள கோட்டை அருகே பாலத்தின் மேல் உள்ள குழாய்கான பிளாட் பார்ம் உடைந்துள்ளதை புதியதாக அமைக்கவும்,அதில் உள்ள 6" CI குழாயின் இணைப்புகளை (Joint) முழுவதுமாக எடுத்து மறு இணைப்பு செய்யவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,00,000/-க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2722 /2020/இ2)

18. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்31ல் கல்லாங்குத்து பகுதியில் உள்ள 6"PVC ல் இருந்து புதியதாக 6'' PVC குழாய் நீட்டிப்பு செய்து மற்றும் வால்வு பொருத்தி மேற்படி பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு அழுத்தம் தரும்படி செய்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,00,000/-க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2683 /2020/இ2)

19. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கி வரும் குடிநீர் டேங்கர் லாரி எண்.TN27X4388ல் உள்ள self motor பழுதடைந்து உள்ளதால் குடிநீர் லாரியினை இயக்க முடியாத நிலையல் உள்ளது. இதனால் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் உதிரி பாகங்கள் பொருத்தி குடிநீர் லாரியினை இயக்கிட செலவின தொகை ரூ.13500/–க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி பிரிவு 15மற்றும் 16ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் .

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. குடிநீர் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி பிரிவு 15மற்றும் 16ன் கீழ் பணிமேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் .

20. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31ல் உள்ள அந்தோணி நகர் அடுத்த தெற்குகாடு பகுதியில் பாறைகள் உள்ளதால் அதனை உடைத்து குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் இணைப்பு வழங்கவேண்டியுள்ளதால், குடிநீர் குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,000/-க்கு கூட்டப்பொருள்வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம். செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2873 /2020/இ2)

21. ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட சேலம் கடலூர் மெயின் ரோட்டில் காந்தி சிலை முதல் மாரிமுத்து ரோடு வரையுள்ள பகுதியில் புதியதாக 4" பி.வி.சி குழாய் அமைத்து வால்வு பொருத்தி ஏற்கனவே உள்ள 8" ஏ.சி குழாயில் உள்ள குடிநீர் இணைப்புகளை மாற்றி அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/-க்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண்.2684/2020/இ2)
2. மேற்கண்ட பணியினை மேல் நடவடிக்கை தொடர தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

22. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேட்டூர் ஆத்தூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீரினை கிருமி நாசினி செய்ய Sodium hypo chloride (Liquid chlorine) பயன்படுத்தப்பட்டு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் குடிநீர் பயன்பாட்டின் அவசியம் கருதி அவ்வப்போது தேவைக்கேற்ப சப்ளை செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,00,000/-க்கு கூட்டப்பொருள் வைக்க தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கு .

அலுவலகக் குறிப்பு

அனுமதிக்கலாம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2874 /2020/இ2)

23. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர் மாதத்திற்கான நாட்குறிப்பினை தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.

தனிஅலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.